# தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவம்

எண் 100, அண்ணாசாலை, கிண்டி, சென்னை 600 032
தொலைபேசி 044-22201337
மின்னஞ்சல் முகவரி ombudsmanlocal@tn.gov.in
இணையதள முகவரி www.tnlbo.tn.gov.in


முன்னிலை: திரு மகேசன் காசிராஜன், இ.ஆ.ப. (ஓ)
**தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர்**

**ஆணை எண்:** 192/மா/2024

**நாள்: 24.11.2025**

G. வெங்கடேஷ்
கள்ளக்குறிச்சி --- முறையீட்டு மனுதாரர்

மண்டல அலுவலர், மண்டலம் 14
பெருநகர சென்னை மாநகராட்சி --- எதிர் மனுதாரர்

கள்ளக்குறிச்சி மாவட்டம், சின்ன சேலம் வட்டம், கச்சிராயப்பாளையம், L.F. ரோடு, கதவு எண் 233 என்கிற முகவரியில் வசிக்கும் திரு. G. வெங்கடேஷ் என்பவரின் 13.08.2024 நாளிட்ட மனு இம்முறைமன்ற நடுவத்தில் 14.08.2024 அன்று பெறப்பட்டு 192/மா/2024 என எண்ணிட்ட முறையீட்டு மனுவாக பதிவு செய்யப்பட்டது. மனுதாரரின் முறையீட்டு மனு பரிசீலிக்கப்பட்டு கீழ்க்காணும் ஆணை வெளியிடப்படுகிறது.

## ஆணை

கள்ளக்குறிச்சி மாவட்டம், சின்ன சேலம் வட்டம், கச்சிராயப்பாளையம், L.F. ரோடு, கதவு எண் 233 என்கிற முகவரியில் வசிக்கும் திரு. G. வெங்கடேஷ் என்பவர் 13.08.2024 நாளிட்ட தனது மனுவில் பின்வரும் புகார்களை தெரிவித்துள்ளார்:

"நான், கள்ளக்குறிச்சி மாவட்டம், கச்சிராயப்பாளையம் கிராமத்தில் என் குடும்பத்துடன் வசித்து வருகிறேன். நான் அடிக்கடி என் உறவினரை சந்திப்பதற்காக சென்னை மாநகராட்சி மண்டலம் 14வது அலுவலகத்திற்கு எதிரிலுள்ள புழுதிவாக்கம் பகுதிக்கு காரில் வந்து செல்வது வழக்கம். சென்னை மாநகராட்சி மண்டலம் 14வது அலுவலகத்திற்கு எதிரில் முன்னாள் கவுன்சிலர் ஏழுமலை என்பவர் தெருவிலேயே மாடுகள் வளர்த்து தினமும் அதன் பாலை கறந்து விட்டு மாடுகளை தெருவிலேயே கட்டுப்பாடின்றி அவிழ்த்துவிடுவார். இது பற்றி நான் பலமுறை சென்னை மாநகராட்சி இணையதளம் மூலம் புகார் அளித்துள்ளேன். அதே போன்று கடந்த 02.07.2024 அன்று மேற்படி ஏழுமலை மாடுகளை தெருவில் அவிழ்த்து விடுவது பற்றி சென்னை மாநகராட்சி இணையதளம் மூலம் புகார் அளித்தேன். என் புகாரின் எண் 2024–655 GJD ஆகும்.

என்னுடைய புகாரின் அடிப்படையில் கடந்த 02.07.2024 அன்று மூன்று மாடுகள் பிடிக்கப்பட்டதாகவும், மாடுகளின் உரிமையாளர்களுக்கு எச்சரிக்கை அறிவிப்பு கொடுக்கப்பட்டதாகவும், மேலும் இது குறித்து மாடு உரிமையாளர்கள் மீது மடிப்பாக்கம் காவல் நிலையத்தில் புகார் அளித்துள்ளதாகவும் தெரிவித்து என்னுடைய புகாரை சென்னை மாநகராட்சி முடித்துவிட்டது. மேற்படி சென்னை மாநகராட்சியின் புகார் அடிப்படையில் மடிப்பாக்கம் காவல் துறையினர் எந்த நடவடிக்கையும் எடுக்கவில்லை. மடிப்பாக்கம் காவல் துறையினர் நடவடிக்கை எடுக்காதது குறித்து தெரிவித்து மேல் நடவடிக்கையினை சென்னை மாநகராட்சி மண்டலம் 14வது மண்டல அலுவலர் மற்றும் மண்டல நல அலுவலர் எடுக்கவில்லை. அதனால் மேற்படி மாடு உரிமையாளர் ஏழுமலை தொடர்ந்து கட்டுப்பாடின்றி தினமும் மாடுகளை தெருவில் அவிழ்த்துவிட்டு வருகிறார். இவரைப் போன்றே சென்னை மாநகராட்சி 14வது மண்டலத்திற்குட்பட்ட தங்கவேல் விரிவு தெருவில் வசித்து வரும் ஜெயம் என்பவரும் மாடுகள் வளர்த்து கட்டுப்பாடின்றி தெருவில் அவிழ்த்துவிட்டு வருகிறார். இவர் மீதும் சென்னை மாநகராட்சி மடிப்பாக்கம் காவல் நிலையத்தில் கடந்த 02.07.2024 அன்று புகார் அளித்துள்ளது. மேற்படி ஏழுமலை தெருவில் மீண்டும் மாடுகளை அவிழ்த்து விடுவது பற்றி தெரிவித்து மாடுகளை பறிமுதல் செய்யக்கோரி கடந்த 11.08.2024 அன்று நான் மீண்டும் சென்னை மாநகராட்சி இணையதளம் மூலம் புகார் அளித்துள்ளேன். அதன் எண் 2024–701 UMH ஆகும். மேற்படி மாட்டின் உரிமையாளர்கள் மாடுகளை தெருவில் கட்டுப்பாடின்றி அவிழ்த்து விடுவதால் பொது மக்கள் உயிர் பயத்துடனேயே சாலையில் நடக்க வேண்டி உள்ளது. 14வது மண்டல சென்னை மாநகராட்சி அதிகாரிகள் சட்டத்திற்கு புறம்பாக மாடுகளை அவிழ்த்து விடும் உரிமையாளர்கள் மீது கடுமையான தொடர் நடவடிக்கைகளை எடுக்காத காரணத்தினால் மாடுகள் கட்டுப்பாடின்றி சாலைகளில் திரிவது வழக்கமாக உள்ளது. சென்னை மாநகராட்சியின் 14வது மண்டல அலுவலரும், மண்டல நல அலுவலரும் தங்களது சட்டப்பூர்வமான கடமைகளை ஆற்றாத காரணத்தால் பொதுமக்கள் சாலைகளில் சுற்றித்திரியும் மாடுகளால் உயிர் பயத்துடன் வாழ வேண்டியுள்ளது. எனவே தாங்கள் தயவு செய்து சட்டப்படி கடமையாற்றாத மேற்படி மண்டல அலுவலர் மற்றும் மண்டல நல அலுவலர் மீது தகுந்த நடவடிக்கை எடுப்பதுடன், சாலைகளில் கட்டுப்பாடின்றி மாடுகளை அவிழ்த்து விடும் உரிமையாளர்கள் மீது கடுமையான நடவடிக்கை எடுக்க சென்னை மாநகராட்சிக்கு உத்தரவிடுவதுடன் கட்டுப்பாடின்றி சாலைகளில் சுற்றித்திரியும் மாடுகளை நிரந்தரமாக பறிமுதல் செய்ய தகுந்த உத்தரவு பிறப்பிக்குமாறு மாண்பமை உள்ளாட்சி முறைமன்ற நடுவரை நான் வேண்டுகிறேன்.'' எனத் தெரிவித்துள்ளார்.

2. மனுதாரர் மனு மீதான அறிக்கையை அனுப்புமாறு இம் முறைமன்ற நடுவ 22.10.2024 நாளிட்ட அறிவிப்பு மூலம் பெருநகர சென்னை மாநகராட்சி மண்டலம் 14ன் மண்டல அலுவலரிடம் கோரப்பட்டது.

3. பெருநகர சென்னை மாநகராட்சி மண்டலம்14ன் மண்டல அலுவலர் 03.11.2025 நாளிட்ட தனது அறிக்கையில் பின்வருமாறு தெரிவித்துள்ளார்:

''மனுதாரர் புகார் தொடர்பாக புழுதிவாக்கம் கோட்டம் 186 சார்ந்த பகுதிகளில் மாடு உரிமையாளர்கள் 23 நபர்களுக்கும் திரு ஏழுமலை மற்றும் திரு.ஜெயம் அவர்களுக்கும் 13.08.2024 அன்று தமிழ்நாடு பொது சுகாதாரச்சட்டம் 1939 பிரிவு 44–ன் படியும் பிராணிகள் வதை தடுப்புச்சட்டம் 1982 பிரிவு 11ன் படியும் நடவடிக்கை எடுக்கப்படும் என அறிவிப்பு வழங்கப்பட்டுள்ளது. மேலும் மடிப்பாக்கம் எஸ்7 காவல் நிலையத்தில் புகார் அளிக்கப்பட்டு தற்போது காவல் துறை உதவியுடன் மண்டலம் 14ஐ சார்ந்த பகுதிகளில் கடந்த 2024ம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் முதல் டிசம்பர் மாதம் வரை 68 மாடுகள் பிடிக்கப்பட்டுள்ளது.

மேலும் 2025 ஜனவரி முதல் அக்டோபர் வரை 98 மாடுகள் பிடிக்கப்பட்டுள்ளது. மாடுகள் அனைத்தும் D.Depotல் அடைக்கப்பட்டு தண்டத் தொகையும் வசூலிக்கப்பட்டுள்ளது.'' எனத் தெரிவித்துள்ளார்.

4. இம்மனு தொடர்பாக மனுதாரர் மற்றும் எதிர்மனுதாரர் ஆகியோரை தமிழ்நாடு உள்ளாட்சிகள் அமைப்புகள் முறைமன்ற நடுவத்தில் 04.11.2025 அன்று நடைபெறும் விசாரணைக்கு ஆஜராகுமாறு 24.10.2025 நாளிட்ட அழைப்பாணைகள் அனுப்பப்பட்டன.

5. மனுதாரர் மேற்படி விசாரணையில் கலந்து கொள்ளவில்லை. இதுகுறித்து மனுதாரர் தனது 31.10.2025 நாளிட்ட கடிதத்தில் கீழ்க்கண்டவாறு தெரிவித்துள்ளார்:

''கள்ளக்குறிச்சி உரிமையியல் நீதிமன்ற வழக்கில் எதிர்வரும் 04.11.2025 அன்று நான் நீதிமன்றத்தில் ஆஜராக வேண்டியுள்ளதால் எதிர்வரும் 04.11.2025 அன்று மாண்பமை தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவ விசாரணையில் நான் கலந்து கொள்ள இயலாத நிலை ஏற்பட்டுள்ளது. எனவே, தாங்கள் தயவு செய்து நான் சமர்ப்பித்த ஆவணங்களின் அடிப்படையில் என் வழக்கினை தீர்வு செய்ய வேண்டுகிறேன்.'' எனத் தெரிவித்துள்ளார்.

6. பெருநகர சென்னை மாநகராட்சி மண்டலம்14ன் மண்டல கால்நடை அலுவலர் 04.11.2025 அன்று தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவத்தில் நடைபெற்ற விசாரணையில் நேரடியாக ஆஜராகி கீழ்க்கண்டவாறு தனது வாக்குமூலத்தை பதிவு செய்துள்ளார்:–

''மனுதாரர் புகார் தொடர்பாக புழுதிவாக்கம் கோட்டம் 186 சார்ந்த பகுதிகளில் மாடு உரிமையாளர்கள் 23 நபர்களுக்கும் திரு ஏழுமலை மற்றும் திரு.ஜெயம் அவர்களுக்கும் 13.08.2024 அன்று தமிழ்நாடு பொது சுகாதாரச்சட்டம் 1939 பிரிவு 44–ன்படியும் பிராணிகள் வதை தடுப்புச்சட்டம் 1982 பிரிவு 11ன் படியும் நடவடிக்கை எடுக்கப்படும் என அறிவிப்பு வழங்கப்பட்டுள்ளது. மேலும் மடிப்பாக்கம் எஸ்7 காவல் நிலையத்தில் புகார் அளிக்கப்பட்டு தற்போது காவல் துறை உதவியுடன் மண்டலம் 14ஐ சார்ந்த பகுதிகளில் கடந்த 2024 ம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் முதல் டிசம்பர் மாதம் வரை 68 மாடுகள் பிடிக்கப்பட்டுள்ளது. மேலும் 2025 ஜனவரி முதல் அக்டோபர் வரை 98 மாடுகள் பிடிக்கப்பட்டுள்ளது. மாடுகள் அனைத்தும் புதுப்பேட்டையில் உள்ள D.Depotல் அடைக்கப்பட்டு தண்டத் தொகையும் வசூலிக்கப்பட்டுள்ளது.

மாட்டு உரிமையாளர்களுக்கு ரூ.10,000/–அபராத தொகை விதிக்கப்படுகிறது. இந்த அபராத தொகை ஒவ்வொரு நாளுக்கும் ரூ.1000/– வீதம் மாட்டு உரிமையாளர்களிடம் வசூலிக்கப்படும். மேலும் மண்டலம் 14–ல் கோசாலை அமைக்கும் பணி நடைபெற்று வருகிறது இப்பணி முடிந்தவுடன் மக்களுக்கு இடையூறாக தெருக்களில் சுற்றித் திரியும் மாடுகள் பிடிக்கப்பட்டு மேற்கண்ட கோசாலையில் சேர்க்கப்பட்டு பராமரிக்கப்படும்.

இம்மண்டலத்தில் மாடுகள் தெருக்களில் சுற்றி திரியாமல் இருக்க மண்டல அலுவலர்களால் தொடர் கண்காணிப்பு பணி மேற்கொள்ளப்பட்டு வருகிறது என்று இம்முறை மன்ற நடுவர் அவர்களுக்கு பணிவுடன் தெரிவித்துக்கொள்கிறேன்.''.

7. மனுதாரரின் மனு மற்றும் கடிதம், எதிர்மனுதாரரான பெருநகர சென்னை மாநகராட்சி மண்டலம் 14ன் மண்டல அலுவலரின் அறிக்கை மற்றும் மண்டல கால்நடை அலுவலரின் வாக்குமூலம் ஆகியவை இம்முறைமன்ற நடுவத்தால் கவனமுடன் பரிசீலிக்கப்பட்டு கீழ்க்கண்ட விவரங்கள் கண்டறியப்பட்டன:

புழுதிவாக்கம் பகுதியில் உள்ள சென்னை மாநகராட்சி மண்டலம் 14வது அலுவலகத்திற்கு எதிரில் முன்னாள் கவுன்சிலர் திரு. ஏழுமலை என்பவர் தெருவிலேயே மாடுகள் வளர்த்து தினமும் அதன் பாலை கறந்துவிட்டு மாடுகளை தெருவிலேயே கட்டுப்பாடின்றி அவிழ்த்துவிடுவது பற்றியும், இது குறித்து, சென்னை மாநகராட்சி இணையதளம் மூலம் புகார் அளிக்கப்பட்டு, அப்புகாரின் அடிப்படையில் கடந்த 02.07.2024 அன்று மூன்று மாடுகள் பிடிக்கப்பட்டதாகவும், மாடுகளின் உரிமையாளர்களுக்கு எச்சரிக்கை அறிவிப்பு கொடுக்கப்பட்டதாகவும், மேலும் இது குறித்து மாட்டு உரிமையாளர்கள் மீது மடிப்பாக்கம் காவல் நிலையத்தில் புகார் அளித்துள்ளதாகவும் தெரிவித்து, அதன் பின்னர் தொடர் நடவடிக்கைகள் ஏதும் மண்டல அலுவலர் எடுக்கவில்லை என்பதும், மேலும், சென்னை மாநகராட்சி 14வது மண்டலத்திற்குட்பட்ட தங்கவேல் விரிவு தெருவில் வசித்து வரும் திரு. ஜெயம் என்பவரும் மாடுகள் வளர்த்து கட்டுப்பாடின்றி தெருவில் அவிழ்த்துவிட்டு வருகிறார் என்பதும், மேற்படி மாட்டின் உரிமையாளர்கள் மாடுகளை தெருவில் கட்டுப்பாடின்றி அவிழ்த்து விடுவதால் பொது மக்களுக்கு இடையூறு ஏற்படுகிறது என்பதும், எனவே, சட்டத்திற்கு புறம்பாக மாடுகளை அவிழ்த்து விடும் மாட்டு உரிமையாளர்கள் மீது கடுமையான தொடர் நடவடிக்கைகளை மேற்கொள்ளுமாறும் மனுதாரர் கோரியிருப்பது மனுதாரரின் மனுவின் வாயிலாக அறிய முடிகிறது.

மனுதாரர் புகார் தொடர்பாக புழுதிவாக்கம் கோட்டம் 186 சார்ந்த பகுதிகளில் மாட்டு உரிமையாளர்கள் 23 நபர்களுக்கும் மற்றும் திரு ஏழுமலை மற்றும் திரு.ஜெயம் ஆகியோருக்கும், 13.08.2024 அன்று தமிழ்நாடு பொது சுகாதாரச் சட்டம், 1939, பிரிவு 44ன் படியும் பிராணிகள் வதை தடுப்புச் சட்டம், 1982, பிரிவு 11ன் படியும் நடவடிக்கை எடுக்கப்படும் என அறிவிப்பு வழங்கப்பட்டுள்ளது என்பதும், மடிப்பாக்கம் எஸ்7 காவல் நிலையத்தில் புகார் அளிக்கப்பட்டு தற்போது காவல் துறை உதவியுடன் மண்டலம் 14ஐ சார்ந்த பகுதிகளில் கடந்த 2024 ம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் முதல் டிசம்பர் மாதம் வரை 68 மாடுகளும், மற்றும் 2025 ஜனவரி முதல் அக்டோபர் வரை 98 மாடுகளும் பிடிக்கப்பட்டுள்ளது என்பதும், அம்மாடுகள் அனைத்தும் புதுப்பேட்டையில் உள்ள D.Depotல் அடைக்கப்பட்டு தண்டத் தொகையும் வசூலிக்கப்பட்டுள்ளது என்பதும், மாட்டு உரிமையாளர்களுக்கு ரூ.10,000/–அபராத தொகை விதிக்கப்படுகிறது என்பதும், இந்த அபராத தொகை ஒவ்வொரு நாளுக்கும் ரூ.1000/– வீதம் மாட்டு உரிமையாளர்களிடம் வசூலிக்கப்படும் என்பதும், மண்டலம் 14–ல் கோசாலை அமைக்கும் பணி முடிந்தவுடன் தெருக்களில் சுற்றித் திரியும் மாடுகளை கோசாலையில் சேர்க்கப்பட்டு பராமரிக்கப்படும் என்பதும் பெருநகர சென்னை மாநகராட்சி மண்டலம் 14–ன் மண்டல அலுவலரின் அறிக்கை மற்றும் மண்டல கால்நடை அலுவலரின் வாக்குமூலம் ஆகியவற்றின் வாயிலாக அறிய முடிகிறது.

இந்நேர்வில், மனுதாரர் புகார் தொடர்பாக, எதிர்மனுதாரர் தரப்பில் மண்டலம் 14–ல் கோசாலை அமைக்கும் பணி முடிந்தவுடன் தெருக்களில் சுற்றித் திரியும் மாடுகள் பிடிக்கப்பட்டு மேற்கண்ட கோசாலையில் சேர்க்கப்பட்டு பராமரிக்கப்படும் என்று தெரிவித்த போதிலும், தெருவில் சுற்றி திரியும் மாட்டு உரிமையாளர்கள் மீது கடுமையான சட்டபூர்வ நடவடிக்கை மேற்கொள்ளுமாறும், மேலும், பெருநகர சென்னை மாநகராட்சி மண்டலம்14–ன் மண்டல நல

அலுவலர் தன்னுடைய வாக்குமூலத்தில் தெரிவித்தவாறு கோசாலை அமைக்கும் பணியை விரைந்து முடிக்க உரிய நடவடிக்கை மேற்கொள்ளுமாறும், பெருநகர சென்னை மாநகராட்சி மண்டல அலுவலருக்கு உத்திரவிடுமாறு பெருநகர சென்னை மாநகராட்சி ஆணையருக்கு இம்முறைமன்றம் பரிந்துரை செய்து ஆணையிடுகிறது.

2025–ஆம் ஆண்டு நவம்பர் திங்கள் 24–ஆம் நாள் என்னால் கையொப்பமிடப்பட்டு அலுவலக முத்திரையுடன் இவ்வாணை வெளியிடப்படுகிறது.

//ஒப்பம்//
தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர்.

பெறுநர்

(1) திரு. G. வெங்கடேஷ்,
கதவு எண் 233, L.F. ரோடு,
கச்சிராயப்பாளையம்–606 207,
சின்ன சேலம் வட்டம்,
கள்ளக்குறிச்சி மாவட்டம்.

(2) ஆணையர், பெருநகர சென்னை மாநகராட்சி
ரிப்பன் மாளிகை, சென்னை 600 003

(3) மண்டல அலுவலர், மண்டலம் 14,
பெருநகர சென்னை மாநகராட்சி
எண் 664, புழுதிவாக்கம் பிரதான சாலை,
புழுதிவாக்கம், சென்னை 600 091.

(4) மண்டல நல அலுவலர்,
மண்டலம் 14, பெருநகர சென்னை மாநகராட்சி
எண் 664, புழுதிவாக்கம் பிரதான சாலை,
புழுதிவாக்கம், சென்னை 600 091.

(5) கண்காணிப்பாளர்/ ஒருங்கிணைப்பாளர் (Nodal Officer)
மழைநீர் வடிகால் துறை,
பெருநகர சென்னை மாநகராட்சி,
ரிப்பன் மாளிகை, சென்னை 600 003

நகல்

மாண்புமிகு முறைமன்ற நடுவரின் தனிச்செயலர்
இகோ/உதிரிகள்.

//ஆணைப்படி /அனுப்பப்படுகிறது //

செயலாளர்.

தமிழ்நாடு மாநில உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவம்
வாய்மையே வெல்லும்
சென்னை–600 032